# சாதாரணக் கூட்டம்

அன்புடையீர்

வணக்கம். பல்லடம் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் வருகிற 29.09.2023 வெள்ளிகிழமை அன்று மாலை 04.30 மணியளவில் நகர்மன்ற தலைவர் திருமதி.கவிதாமணி ராஜேந்திரகுமார்,B.B.M., அவர்களின் தலைமையில் நகர்மன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெற உள்ளது. எனவே, அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## பொருள் :01

பல்லடம் நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோரது மாதாந்திர நாட்குறிப்பு நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

## பொருள் : 02

பல்லடம் நகராட்சி வார்டு எண்:01 முதல் 18 வரை உள்ள 12 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து குடிநீர் விநியோகம் செய்தல், திரவ குளோரினேசன் செய்தல் ஆகிய பணிகளுக்கு ஆட்கள் சப்ளை செய்தல் பணிக்கு ஒப்பந்த காலம் 14.07.2023 உடன் முடிவடைந்து விடுவதால், ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரை (31.08.2023 வரை) 48 நாட்களுக்கு ஒப்பந்த காலம் நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினத் தொகை ரூ.3.70 இலட்சத்தினை பொது நிதியிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும், மேற்காணும் பணியானது குடிநீர் விநியோகப் பணி என்பதால் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**
மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 03

பல்லடம் நகராட்சி வார்டு எண்:01 முதல் 18 வரை உள்ள நகராட்சிக்கு சொந்தமான 108 ஆழ்துளை கிணறுகள் மற்றும் 13 திறந்தவெளி கிணறுகள் மூலம் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு வழங்கப்படும் குடிநீரினை விநியோகம் செய்யும் பணிக்கான ஒப்பந்த காலம் 14.07.2023 உடன் முடிவடைந்து விடுவதால், ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரை 48 நாட்களுக்கு அதாவது 31.08.2023 வரை ஒப்பந்த காலம் நீட்டிப்பு செய்யவும், மேலும் அதற்கான செலவினத் தொகை ரூ.3.80 இலட்சத்தினை பொது நிதியிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும், மேற்காணும் பணியானது குடிநீர் விநியோகப் பணி என்பதால் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**
மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 04

பல்லடம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஜென்செட் இயந்திரம் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் காணொளி

கூட்டம் நடைபெறும் பொழுது மின்சார துண்டிப்பு ஏற்பட்டால் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாத நிலை ஏற்படுகிறது. இதனால் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுகிறது. எனவே, ஜென்செட் இயந்திரத்தை பழுதுநீக்கி, ஆயில் சர்வீஸ் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.0.30 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணியினை நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் M/s.அன்னை எண்டர்பிரைசிஸ், திருப்பூர் அவர்கள் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 05

பல்லடம் நகராட்சி நகரமைப்பு பிரிவிற்கு நகரமைப்பு அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு பணியிடம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தற்போது நகரமைப்பு பிரிவில் நகரமைப்பு அலுவலர், நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர் பணிபுரிந்து வருவதால், நகரமைப்பு பிரிவிற்கு என தனியாக ஆதார் அறைக்கு அருகில் உள்ள அறை ஒதுக்கப்பட்டு, அங்கு பராமரிப்பு பணிகள், வர்ணம் பூசுதல் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.0.30 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணியினை நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் M/s.கார்த்திக், திருப்பூர் அவர்கள் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :06

பல்லடம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுப் பணித்துறைக்கு சொந்தமான கொசவம்பாளையம், ராம் நகர், பொள்ளாச்சி சாலை, நால் ரோடு, பச்சாபாளையம், இராயர்பாளையம், ஒன்பதாம் பள்ளம் ஓடை, தெற்குபாளையம், நாரணாபுரம் வரை உள்ள ஓடையில் முற்புதர்கள், செடி கொடிகள் அதிகமாக உள்ளதாலும், பல்லடம் நகராட்சியின் மையப் பகுதியில் ஓடை செல்வதால் மேற்கண்ட பகுதிகளை சுத்தம் செய்வதன் மூலம் அந்தப் பகுதிகளின் பொது சுகாதாரம் பேணப்படுவதுடன் மழைநீர் தங்கு தடையின்றி செல்ல வழிவகை ஏற்படும். எனவே, மேற்கண்ட பகுதிகளில் முட்புதர்களை அகற்றி, ஓடையை தூர் வாரும் பணியினை ரூ.10.00 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :07

பல்லடம் நகராட்சி வார்டு எண்:01 முதல் 09 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் தவிர பிற உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் ஆழ்துளைக் கிணற்று மின்மோட்டார்கள், திறந்தவெளி கிணற்று மின்மோட்டார்கள் மற்றும் கழிவுநீர் வெளியேற்றும் மின்மோட்டார்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, வார்டு எண்:01 முதல் 09 வரை உள்ள ஆழ்துளைக் கிணற்று

மின்மோட்டார்கள், திறந்தவெளி கிணற்று மின்மோட்டார்கள் மற்றும் கழிவுநீர் வெளியேற்றும் மின்மோட்டார்கள் ஆகியவற்றை சரிசெய்ய ரூ.4.90 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :08

பல்லடம் நகராட்சி வார்டு எண்:10 முதல் 18 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் தவிர பிற உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் ஆழ்துளைக் கிணற்று மின்மோட்டார்கள், திறந்தவெளி கிணற்று மின்மோட்டார்கள் மற்றும் கழிவுநீர் வெளியேற்றும் மின்மோட்டார்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, வார்டு எண்:10 முதல் 18 வரை உள்ள ஆழ்துளைக் கிணற்று மின்மோட்டார்கள், திறந்தவெளி கிணற்று மின்மோட்டார்கள் மற்றும் கழிவுநீர் வெளியேற்றும் மின்மோட்டார்கள் ஆகியவற்றை சரிசெய்ய ரூ.4.90 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :09

பல்லடம் நகராட்சி வார்டு எண்:01 முதல் 18 வரை உள்ள பொதுமக்களுக்கு தினந்தோறும் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு நகராட்சிக்கு சொந்தமான 108 எண்ணிக்கையிலான ஆழ்துளைக்கிணறு மற்றும் 13 எண்ணிக்கையிலான திறந்தவெளி கிணறுகள் மூலம் விநியோகம் செய்வதற்கு நகராட்சியின் பொறியியல் பிரிவில் குடிநீர் சம்பந்தமான நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஒப்பந்த அடிப்படையில் (திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி விலை விகிதப் பட்டியல்படி) பணியாளர்களை நியமனம் செய்து (Out Sourcing) மேற்கண்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே மேற்கண்ட பணிக்கு வழங்கப்பட்டிருந்த பணி உத்திரவு 31.08.2023 உடன் முடிவடைய உள்ளதால் மேற்கண்ட குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவேண்டியுள்ளது. எனவே மேற்காணும் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் Out Sourcing மூலம் பணிகளை ரூ.9.80 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணியானது குடிநீர் பணியாக உள்ளதாலும், பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :10

பல்லடம் நகராட்சி வார்டு எண்:01 முதல் 18 வரை உள்ள பொதுமக்களுக்கு தினந்தோறும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து பெறப்படும் குடிநீர் அண்ணாநகர், CTC காலனி, மேற்கு பல்லடம், வடுகபாளையம், பனப்பாளையம், ராயர்பாளையம், BDO காலனி, SAP நகர், NSP நகர், கல்லம்பளையம், சேடபாளையம், நாரணாபுரம் ஆகிய 12 மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யவும், கேட்வால்வு 405 எண்ணிக்கை மற்றும் Sluice Valve 40 எண்ணிக்கை வால்வுகள் ஆகியவற்றை தினசரி பயன்படுத்தி குடிநீரை சீரான முறையில் பிரித்து வழங்குவதற்கும், நகராட்சியின் பொறியியல் பிரிவில் குடிநீர் சம்பந்தமான நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஒப்பந்த அடிப்படையில் (திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி விலை விகிதப் பட்டியல்படி) பணியாளர்களை நியமனம் செய்து (Out Sourcing) மேற்கண்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே மேற்கண்ட பணிக்கு வழங்கப்பட்டிருந்த பணி உத்திரவு 31.08.2023 உடன் முடிவடைய இருப்பதால் மேற்கண்ட குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவேண்டியுள்ளது. எனவே மேற்காணும் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் Out Sourcing மூலம் பணிகளை ரூ.9.50 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணியானது குடிநீர் பணியாக உள்ளதாலும், பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 11

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2023–2024ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 23.06.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | பல்லடம்4நகர்மன்றத் தலைவர் அறையில் 2 Ton அளவுடைய குளிரூட்டி (AC) பொருத்துதல் மற்றும் புதியதாக மரத்தாலான பீரோ (wooden Bureau) மற்றும் wooden cub board வசதி ஏற்படுத்துதல் | 3.00 | திருமதி.வி.கோமதி, ஒப்பந்ததாரர், பல்லடம். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.03% குறைவு |
| | | | M/s.அன்னை எண்டர்பிரைசிஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05% குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s.அன்னை எண்டர்பிரைசிஸ் (மதிப்பீட்டினை விட 0.05% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 12

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2023–2024ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 23.06.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டாள் நகர் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் (MCC) மற்றும் மேற்கு பல்லடம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகம் ஆகிய இடங்களில் கண்காணிப்பு கேமரா (CCTV) பொருத்துதல் | 1.20 | M/s.அன்னை எண்டர்பிரைசிஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.21% குறைவு |
| | | | திருமதி.வி.கோமதி, ஒப்பந்ததாரர், பல்லடம். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05% குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s.அன்னை எண்டர்பிரைசிஸ் (மதிப்பீட்டினை விட 0.21% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 13

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2023–2024ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 23.06.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்:08 பச்சாபாளையம் மயானத்தில் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி நடைபெறும் இடத்தை சுற்றிலும் கம்பிவேலி அமைத்தல் | 0.62 | M/s.அன்னை எண்டர்பிரைசிஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% குறைவு |
| | | | திரு.வி.சுப்பிரமணியன், ஒப்பந்ததாரர், பல்லடம். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.07% குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s.அன்னை எண்டர்பிரைசிஸ் (மதிப்பீட்டினை விட 0.10% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 14</u>

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2023–2024ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 23.06.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்:07 இராயர்பாளையம் மீனாட்சி அவென்யூ நான்காவது குறுக்கு வீதியில் மழைநீர் வடிகால் வசதி அமைத்தல் | 1.00 | M/s.அன்னை எண்டர்பிரைசிஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.09% குறைவு |
| | | | திரு.வி.சுப்பிரமணியன், ஒப்பந்ததாரர், பல்லடம். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.02% குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s.அன்னை எண்டர்பிரைசிஸ் (மதிப்பீட்டினை விட 0.09% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 15</u>

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2023–2024ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 23.06.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்:18 வடுகபாளையம் குட்டையில் தண்ணீர் வெளியேறும் (Outlet) பகுதியில் துருப்பிடிக்காத இரும்பினாலான நடைபாதை அமைத்தல் | 3.00 | M/s.கே.பி.டி. கான்ட்ரக்டர்ஸ், ஒப்பந்ததாரர், கரூர் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.12% குறைவு |
| | | | திரு.வி.சுப்பிரமணியன், ஒப்பந்ததாரர், பல்லடம். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.03% குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s.கே.பி.டி. கான்ட்ரக்டர்ஸ் (மதிப்பீட்டினை விட 0.12% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 16

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2023–2024ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 23.06.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்:03 நாரணாபுரம் ஓடை அருகில் உள்ள திறந்தவெளிக் கிணற்றில் புதிதாக மின் மோட்டார் பொருத்துதல் | 1.90 | M/s.கே.பி.டி. கான்ட்ரக்டர்ஸ், ஒப்பந்ததாரர், கரூர் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.02% குறைவு |
| | | | திரு.வி.சுப்பிரமணியன், ஒப்பந்ததாரர், பல்லடம். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.07% குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள திரு.வி.சுப்பிரமணியன் (மதிப்பீட்டினை விட 0.07% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 17

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2023–2024ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 23.06.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வடுகபாளையம் குட்டை பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல் மற்றும் குட்டையினை சுற்றிலும் பகிர்மான குழாய்கள், சொட்டு நீர் பாசனம் அமைத்தல் | 12.00 | திரு.வி.சுப்பிரமணியன், ஒப்பந்ததாரர், பல்லடம். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.08% குறைவு |
| | | | M/s.கே.பி.டி. கான்ட்ரக்டர்ஸ், ஒப்பந்ததாரர், கரூர் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.17% குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s.கே.பி.டி. கான்ட்ரக்டர்ஸ் (மதிப்பீட்டினை விட 0.17% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 18

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2023–2024ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 23.06.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | பல்லடம் நகர் பகுதிகளில் ஏற்படும் குழாய் உடைப்புகளை சரி செய்ய மூலப் பொருட்கள் விநியோகம் செய்தல் | 4.90 | M/s.அன்னை எண்டர்பிரைசிஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.11% குறைவு |
| | | | திரு.வி.சுப்பிரமணியன், ஒப்பந்ததாரர், பல்லடம். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.08% குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s.அன்னை எண்டர்பிரைசிஸ் (மதிப்பீட்டினை விட 0.11% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 19

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2023–2024ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 23.06.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | பல்லடம் நகராட்சியில் உள்ள 12 குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளில் பொருத்தப்பட்டுள்ள குளோரினேசன் இயந்திரங்களுக்கு ஒரு ஆண்டிற்கு தேவைப்படும் திரவ குளோரின் (Sodium Hypo Chloride) சப்ளை செய்யும் பணி | 4.90 | M/s.அன்னை எண்டர்பிரைசிஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.64% குறைவு |
| | | | திருமதி.வி.கோமதி, ஒப்பந்ததாரர், பல்லடம். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.32% குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s.அன்னை எண்டர்பிரைசிஸ் (மதிப்பீட்டினை விட 0.64% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 20

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2023–2024ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 23.06.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி பொறியியல் பிரிவிற்கு தொழில்நுட்ப பணியாளரை அமர்த்துதல் பணி | 3.65 | M/s.அன்னை எண்டர்பிரைசிஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.18% குறைவு |
| | | | திருமதி.வி.கோமதி, ஒப்பந்ததாரர், பல்லடம். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.09% குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s.அன்னை எண்டர்பிரைசிஸ் (மதிப்பீட்டினை விட 0.18% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கும், பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் :21

பல்லடம் நகராட்சியில் மூலதன மானிய நிதி (CGF) 2023–24 ன் கீழ் பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தையில் புதியதாக கடைகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. பழைய பழுதடைந்த கடைகளை இடித்து அப்புறப்படுத்தும் போது அதில் இருந்த பழைய இரும்பு மற்றும் சிமெண்ட் சீட்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் அதனை ஏலம் விடுவதற்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | விலைப்புள்ளிதாரர்களின் பெயர் விவரம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | M/s.Jayam Equipments & Engineering, 39/91, நேரு நகர், தாராபுரம். | பழைய இரும்பு (1 கிலோ) – ரூ.28/–<br>சிமெண்ட் சீட் (1 எண்ணம்) – ரூ.70/– |
| 2 | M/s.Una's & Richshaw, 46/97, நேரு நகர், தாராபுரம். | பழைய இரும்பு (1 கிலோ) – ரூ.26/–<br>சிமெண்ட் சீட் (1 எண்ணம்) – ரூ.68/– |
| 3 | M/s.DS Engineering, 180,சி.எஸ்.ஐ காலனி, ஈரோடு. | பழைய இரும்பு (1 கிலோ) – ரூ.25/–<br>சிமெண்ட் சீட் (1 எண்ணம்) – ரூ.65/– |

மேற்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகளில் அதிகமான விலைப்புள்ளியான பழைய இரும்பு (1 கிலோ) – ரூ.28/– க்கும், சிமெண்ட் சீட் (1 எண்ணம்) – ரூ. 70/–க்கும் உள்ள தொகையினை ஏற்று பொது ஏலம் அறிவிப்பு கோர மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் :22</u>

இந்நகராட்சி பகுதியில் கடந்த மே, ஜீன் மாதங்களில் மூன்று டெங்கு காய்ச்சல் நோயாளிகள் கண்டறியப்பட்டு தடுப்பு பணிகள் மேற்கொண்டு, தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வரப்படுகிறது, எனவே பொதுமக்களை தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு டிபிசி பணியாளர்களை பணியமர்த்தி பொது சுகாதார அவசர அவசியம் கருதி டெங்கு மற்றும் பிற வகை காய்ச்சல்கள் பரவுவதை தடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/ஜே1, நாள்.17.09.2018 ல் ஒவ்வொரு நகராட்சியிலும் தொற்று நோய் பரவலை (Dengue, Covid ) தடுக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு 300 வீட்டிற்கு ஒரு டிபிசி பணியாளர் என்ற அடிப்படையில் பணியாளர்கள் நியமனம் செய்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பல்லடம் நகராட்சி பகுதியில் எள்ள 18000 வீடுகளில் 300 வீட்டுக்கு ஒரு நபர் என்ற அடிப்படையில் 60 டிபிசி பணியாளர்கள் தேவைப்படுகின்றனர், தற்போது நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு 50 டிபிசி பணியாளர்களை மட்டும் பணிக்கு அமர்த்தி பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது

| | |
|---|---|
| சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஒப்பந்த தொழிலாளர்களின் ஒரு நாளைக்கான குறைந்தபட்ச ஊதியம் | ரூ. 507.00 |
| EPF – 12 % | ரூ. 60.84 |
| ESI – 3.25 % | ரூ. 16.47 |
| பணிபாதுகாப்பு உபகரணங்கள், சீருடை 1 % | ரூ.5.07 |
| நிர்வாக செலவு 5 % | ரூ. 25.35 |
| மொத்தம் | ரூ. 614.73 |
| 1 பணியாளருக்கு ஒரு நாளைக்கான செலவு | ரூ.614.73 |
| 50 டிபிசி பணியாளருக்கு ஒரு நாளைக்கான செலவு (50x 614.73) | ரூ.30737.00 |
| 50 டிபிசி பணியாளருக்கு ஒருமாதத்தில் 26 பணி நாட்களுக்கான செலவு (26x30737) | ரூ.7,99,162.00 |
| 6 மாதத்திற்கு 50 டிபிசி பணியாளருக்கான உத்தேச ஊதிய செலவினம் (6 x 7,99,162) | ரூ. 47,94,972.00 |

எனவே, பல்லடம் நகராட்சி நிதிநிலையினை கருத்தில் கொண்டு 50 டிபிசி பணியாளர்களை பொது சுகாதார அவசர அவசியம் கருதி வார்டு எண். 1 முதல் 18 வரையுள்ள வார்டு பகுதிகளில் நோய் தடுப்பு பணியினை மேற்கொள்ள 6 மாதத்திற்கு ஊதியம் மற்றும் இதர செலவினங்கள் கணக்கீட்டுதாளின்படி ரூபாய். 48.00 (ரூபாய் நாற்பத்தி எட்டு லட்சங்கள்) இலட்சத்திற்கும், தினசரி நாளிதழில் ஒப்பந்தப்புள்ளி வெளியிடுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்த நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :23

நகராட்சி நிர்வாக இயக்குர் சென்னை, அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 33552/2022/EA2 –SWM – 12, நாள். 10.01.2023 ன்படி, திடக்கழிவுகளை மேலாண்மை பணியினை தனியார் முகமை/ஒப்பந்ததாரர்/சேவை வழங்குநர் மூலம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 23.05.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Saram Enviro Services Private Ltd, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தீர்மான எண். 131 நாள்: 30.05.2023 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Saram Enviro Services Private Ltd, Chennai நிறுவனத்தின் கடிதத்தில் பல்லடம் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண்.1 முதல் 18 முடிய உள்ள அனைத்து பகுதிகளிலும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள குறைந்தபட்சம் 15 நாட்கள் கால அவகாசம் கோரி கடித வரப்பெற்றுள்ளது. எனவே, பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் , நகரின் தூய்மையை கருத்தில் கொண்டு ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் அதே விலை விகிதத்தில் தற்போது வெளிக்கொணர்வு அடிப்படையில் பணியாளர்களை வழங்கி இப்பணியினை செய்து வரும் திருவாளர். துரை அன்ட் கோ என்ற நிறுவனத்தின் இசைவினை ஏற்று 01.06.2023 முதல் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர் பணியினை மேற்கொள்ளும் வரை தற்காலிகமாக ஏற்கனவே உள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின் அடிப்படையில் நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர் பணியினை மேற்கொள்ளும் வரை தற்காலிக நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கியமைக்கும், அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.31.00 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஏற்கனவே மேற்கண்ட பணிகளுக்கு வெளிக்கொணர்வு மூலம் பணியாளர்களை வழங்கி வரும் துரை அன்ட் கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு 01.06.2023 முதல் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர் பணியினை மேற்கொள்ளும் வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கியதற்கும், அதற்காகும் செலவினத் தொகையை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.589/2018/எச்1)

## பொருள் : 24

பல்லடம் நகராட்சி சொந்தமான மாதப்பூர் நுண்ணுயிர் மையத்தில் (MCC) உள்ள அரவை இயந்திரத்தில் Belt மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேலும், பேலிங் இயந்திரத்திற்கு சர்வீஸ் செய்ய வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச தொகை ரூ.0.30 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணியினை நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் M/s.அன்னை எண்டர்பிரைசிஸ், திருப்பூர் அவர்கள் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :25

பல்லடம் நகராட்சி வார்டு எண்:04 மங்கலம் ரோடு பகுதியில் சாலையின் ஓரத்தில் உள்ள மழைநீர் வடிகாலில் சேகரமாகும் கழிவுநீர் சாலையில் வழிந்தோடுகிறது. இதனால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு பொதுமக்களுக்கு தொற்று நோய் பரவும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பொதுமக்களின் சுகாதார நலன் கருதி மங்கலம் சாலையில் Cover slab உடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்து, அதனை ஏற்கனவே உள்ள கழிவுநீர் தொட்டியில் இணைத்து கழிவுநீர் மின்மோட்டார் வைத்து கழிவுநீரினை அப்புறப்படுத்தும் பணியினை ரூ.12.50 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :26

பல்லடம் நகராட்சி வார்டு எண்:18 மகாலட்சுமி அவென்யூ பகுதியில் மழைநீர் வடிகால் இல்லாததால் வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் சாலையின் ஓரத்தில் தேங்கி நிற்கிறது. எனவே, பொதுமக்களின் சுகாதார நலன் கருதி மகாலட்சுமி அவென்யூ பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை ரூ.1.00 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :27

பல்லடம் நகராட்சி அலுவலகப் பயன்பாட்டிற்கு பயன்படுத்தி வரும் ஈப்பு வாகனம் எண்: TN 42 P 4444, TN 42 F 5736, TN 42 AK 5058 , குடிநீர் வாகனம் வண்டி எண் TN 42 F 9285 மற்றும் அலுவலக ஜெனரேட்டருக்கும் 01.07.2023 முதல் 31.03.2024 வரை டீசல் அடிப்பதற்கு ஆகும் உத்தேச செலவு ரூ.10.00 இலட்சம் ஆகும். மேற்காணும் நான்கு வாகனங்கள் மற்றும் ஜெனரேட்டருக்கு டீசல் அடிக்க M/s.P.A.Rahim Sahib Sons, Palladam நிறுவனத்தின் மூலம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :28

பல்லடம் நகராட்சி பகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளான திருச்சி–கோவை சாலை, பொள்ளாச்சி சாலை, திருப்பூர் சாலை ஆகியவற்றின் நடுவே இருமுகப்பு கொண்ட 163 எண்ணிக்கையிலான 120 Watts LED விளக்குகள் நகராட்சி மூலம் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. மேற்கண்ட தேசிய நெடுஞ்சாலைகளின் மையத்தில் உள்ள LED விளக்குகளுக்கான ஒரு வருட ஆண்டு பராமரிப்பு (AMC) காலம் 31.07.2023 உடன் முடிவடைகிறது. எனவே, பல்லடம் நகராட்சி பகுதிகளில் நெடுஞ்சாலையின் மையத்தில் உள்ள LED விளக்குகளை 6 மாதத்திற்கு பராமரிப்பு செய்யும் பணியினை ரூ.4.20 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணியானது

அத்தியாவசியப் பணியாக உள்ளதாலும், பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>அலுவலக குறிப்பு :</u>
மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் :29</u>

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட SAPS தியேட்டர் அருகில் உள்ள கனரா வங்கி முன்பு பேருந்து நிறுத்த நிழற்கூடை இல்லாததால் பொதுமக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட பகுதிகளில் நிழற்கூடை அமைக்கும் பணியினை ரூ.4.50 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>
மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் :30</u>

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட காவலர் குடியிருப்பு முன்பு பேருந்து நிறுத்த நிழற்கூடை இல்லாததால் பொதுமக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட பகுதிகளில் நிழற்கூடை அமைக்கும் பணியினை ரூ.4.50 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>
மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் :31</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்:10 பாரதிபுரம் எம்.சி. மண்டபம் எதிர்புரம் உள்ள சாலையில் மழைநீர் வடிகால் பழுதடைந்து தண்ணீர் தேங்கி சுகாதார கேடு ஏற்படும் நிலையில் உள்ளது மேலும் குடிநீர் அல்லாத இதர பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வந்த இரும்பு குழாய்கள் துருப்பிடித்து பழுதடைந்த நிலையில் உள்ளன. எனவே, மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் குழாய் பதிக்கும் பணியினை ரூ.4.50 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>
மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் :32</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்:11 பெரியார் நகர் சர்ச் வீதியில் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கப்பட்டு 25 ஆண்டுகளுக்கு மேலானதாலும், குழாய்கள் அமர்ந்த நிலையில் உள்ளதாலும், வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகளில் குடிநீர் மிகவும் குறைவாக செல்கிறது. எனவே, மேற்கண்ட பகுதியில் கான்கிரீட் சாலையை உடைத்து, புதியதாக பிரதான குழாய்கள் அமைக்கும் பணியினை ரூ.1.80 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>
மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :33

பல்லடம் நகராட்சி வார்டு எண்:12 அண்ணாநகர் பள்ளிவாசல் வீதியில் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கப்பட்டு 25 ஆண்டுகளுக்கு மேலானதாலும், குழாய்கள் அமர்ந்த நிலையில் உள்ளதாலும், வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகளில் குடிநீர் மிகவும் குறைவாக செல்கிறது. எனவே, மேற்கண்ட பகுதியில் புதியதாக பிரதான குழாய்கள் அமைக்கும் பணியினை ரூ.1.20 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :34

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் உள்ள மாவு அரைக்கும் இயந்திரம் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பான் இயந்திரம் மிகவும் பழுதடைந்து, பழுதினை சரிசெய்ய இயலாத நிலையில் உள்ளன. எனவே, அம்மா உணவகத்திற்கு புதியதாக ஒரு மாவு அரைக்கும் இயந்திரம் மற்றும் 100 லிட்டர் கொள்ளளவுடைய குடிநீர் சுத்திகரிப்பான் இயந்திரம் வாங்கி பொருத்தும் பணியினை ரூ.3.50 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :35

பல்லடம் நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளிலும் பயன்படுத்தக்கூடிய பிரிண்டர்களில் உள்ள டோனரினை ரீபில், ரீ கண்டிசன் செய்தல் மற்றும் கலர் பிரிண்டருக்கு புதியதாக டோனர்கள் சப்ளை செய்தல் ஆகிய பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :36

பல்லடம் நகராட்சியில் அனைத்து பிரிவுகளிலும் புதியதாக பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள பணியிடங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் ஜெராக்ஸ் மிசின் இல்லாத நிலை உள்ளது. எனவே, புதியதாக கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் ஜெராக்ஸ் மிசின் வாங்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :37

பல்லடம் நகராட்சி வார்டு எண்:06 சக்தி நகர் பகுதியில் உள்ள பொதுக்கிணறு திறந்தவெளியில் உள்ளது. இதனால் குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் தவறி உள்ளே விழும் சூழ்நிலை உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட சக்தி நகர் பகுதியில் உள்ள பொதுக்கிணற்றிக்கு புதியதாக இரும்பு மூடி (Weld mesh) அமைக்கும் பணிக்கு ரூ.2.50 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :38

பல்லடம் நகராட்சி வார்டு எண்:07 இராயர்பாளையம் பார்பர் வீதியில் மழைநீர் வடிகால் பழுதடைந்து தண்ணீர் தேங்கி சுகாதார கேடு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.1.00 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :39

பல்லடம் நகராட்சி வார்டு எண்:07 இராயர்பாளையம் பார்பர் வீதியில் குடிநீர் அல்லாத இதர பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வந்த இரும்பு குழாய்கள் துருப்பிடித்து பழுதடைந்த நிலையில் உள்ளன. மேலும், மீனாட்சி அவென்யூ பகுதிகளுக்கு தண்ணீர் குறைவாக செல்கிறது. எனவே, இராயர்பாளையம் கிணற்றிலிருந்து அபிராமி நகர் வரை மற்றும் பார்பர் வீதியில் புதியதாக குழாய் பதிக்கும் பணிக்கு ரூ.2.50 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :40

பல்லடம் நகராட்சி வார்டு எண்:18 மகாலட்சுமி அவென்யூ மற்றும் ஆண்டாள் நகர் பகுதிகளில் குடிநீர் குழாய்கள் அமர்ந்த நிலையில் உள்ளதால் வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகளில் குடிநீர் மிகவும் குறைவாக செல்கிறது. எனவே, மேற்கண்ட பகுதியில் புதியதாக பிரதான குழாய்கள் அமைக்கும் பணிக்கு ரூ.1.20 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :41

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளிடம் நுழைவு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்தை 2023–2024 ஆம் ஆண்டிற்கு ஏலம் எடுக்க ஒருவரும் முன்வராததால் மேற்படி ஏல இனத்தினை துறை மூலம் வசூல்

செய்ய தீர்மானிக்கப்பட்டு அதன்படி வசூல் செய்ய காலை, மாலை மற்றும் இரவு ஆகிய மூன்று பிரிவாக மூன்று பணியாளர்களை வசூல் பணிகள் பாதிக்கா வண்ணம் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாத வகையில், மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.5863/2017/2பி, நாள்.22.09.2017-ன் படி துப்புரவு பணியாளர்கள் தினக்கூலியாக நாளொன்றுக்கு ரூ.320/- வீதம் தினக்கூலி அடிப்படையில் பணியில் அமர்த்திக்கொள்ள நகர்மன்றத் தீர்மானம் எண்.250 நாள்.30.09.2022ல் புதுப்பிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட காலம் 31.03.2023 உடன் முடிவடைந்தது. மேற்கண்ட பணியினை 2023–2024 ஆம் நிதியாண்டிற்கு ஏப்ரல் 2023 முதல் செப்டம்பர் 2024 வரை தினக்கூலி அடிப்படையிலேயே மூன்று நபர்களை பணிபுரிய அனுமதிக்கவும், அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.2,00,000/-ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க எண்:610/2017/அ2)

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 42</u>

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:01 கல்லம்பாளையம் மங்கலம் சாலையில் உள்ள மின்கம்பம், வார்டு எண்:03 நாரணாபுரம் மேல்நிலைத் தொட்டி அருகில், வார்டு எண்:06 சக்தி நகர், ராயர்பாளையம் பள்ளி செல்லும் வழியில் உள்ள மின்கம்பம், வார்டு எண்:11 பேருந்து நிலைய கிழக்கு பார்த்த கடைகள் மற்றும் மேற்கு பார்த்த கடைகள் மற்றும் என்.ஜி.ஆர் சாலை தினசரி சந்தை ஆகிய 7 இடங்களில் புதியதாக மின் இணைப்புகள் பெறுவதற்கு C-Licensed ஒப்பந்ததாரர் கட்டணம் ரூ.9,760/– னை அரசு அங்கீகாரம் பெற்ற C-Licenser திரு.பி.சிவக்குமரன், பல்லடம் அவர்களுக்கு பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 43</u>

அரசாணை (நிலை) எண் :98, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் :13.07.2023 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

## <u>பொருள் : 44</u>

பல்லடம் நகராட்சியில் அனைத்து பிரிவுகளிலும் புதியதாக பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகிறது. பொறியியல் பிரிவில் புதியதாக இளநிலைப் பொறியாளர் பணியிடம் தற்போது நிரப்பப்பட்டுள்ளது. இளநிலைப் பொறியாளருக்கு என தனியாக இருக்கை வசதி இல்லாததால் பொறியியல் பிரிவில் அலுமினியத் தடுப்பு அமைக்கவும் மற்றும் இதர சிறு பழுது பணிகள் மேற்கொள்ளவும் வேண்டியுள்ளது. இதனை உத்தேசமாக ரூ.1.00 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 45

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்:1905/2021/பி1 நாள்:07.07.2023 ல் நகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு உதவிடும் வகையில் 2023–24 ஆம் கல்வியாண்டில் தினகரன் நாளிதழ் விநியோகம் செய்திட தக்க விதிகளின்படி நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சி பகுதிகளில் உள்ள 9 பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளின் வாசிப்பு திறனை மேம்படுத்தவும் மேலும் நாளிதழ் படித்து பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் அன்றாடம் பள்ளிகளுக்கு பள்ளி வேலை நாட்களில் தினகரன் நாளிதழ் விநியோகம் செய்ய ஒரு ஆண்டிற்கு ஒரு பள்ளிக்கு ரூ.3,000/– வீதம் 9 பள்ளிகளுக்கு ரூ.27,000/– ஆகும். இச்செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 46

பல்லடம் நகராட்சி பகுதிகளில் உள்ள 9 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 1520 எண்ணிக்கையிலான மாணவ, மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் சிற்றுண்டி வழங்க, வார்டு எண்:02 சேடபாளையம் நடுநிலைப் பள்ளியில் சமையற்கூடம் கட்டப்பட்டுள்ளது. இதனை நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அலுவலக அலுவலர்களால் நேரடி கள ஆய்வு செய்யப்பட்டதில், சமையற்கூடத்தில் சில கூடுதல் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. இதனை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள ரூ.1.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 47

பல்லடம் நகராட்சியில் 07–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. மீனாட்சி அவென்யூ, அபிராமி நகர், முத்து கவுண்டர் வீதி, பார்பர் வீதி, திருப்பூர் சாலை (கிழபுறம்) ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகாலை சரிசெய்து தரக்கோருதல்.
2. பனப்பாளையம் பழனிச்சாமி நகர் மற்றும் இட்டேரி வீதி ஆகிய பகுதிகளில் புதியதாக மழைநீர் வடிகால் அமைத்து தரக்கோருதல்.
3. திருப்பூர் சாலை ராயர்பாளையம் மாரியம்மன் கோவில் முன்பு பதியதாக மினி ஐ மாஸ் லைட் அமைத்து தரக்கோருதல்.

## பொருள் : 48

பல்லடம் நகராட்சியில் 10–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. நன்னாசாகிப் வீதியில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகாலை சரிசெய்து தரக்கோருதல்.

2. பாரதிபுரம் சாக்குகாரர் வீதியில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகாலை சரிசெய்து தரக்கோருதல்.
3. பாரதிபுரம் சாக்குகாரர் வீதியில் உள்ள குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் விநியோகம் செய்யும் இரும்பு குழாயை மாற்றி தரக்கோருதல்.

## பொருள் : 49

பல்லடம் நகராட்சியில் 17–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. கணபதி நகரில் சதீஸ்குமார் வீடு முதல் கிழக்கு தென்வடல் மழைநீர் வடிகால் வரை புதியதாக மழைநீர் வடிகால் அமைத்து தரக்கோருதல்.
2. கணபதி நகரில் சதீஸ்குமார் வீடு முதல் கிழக்கு தார் சாலை வரை பழுதடைந்துள்ள கான்கிரீட் தளத்தை புதுப்பித்து தரக்கோருதல்
3. மேற்கு பல்லடம் செல்லும் சாலையில் வி.எஸ்.வி. நகர் செல்லும் வழியில் உள்ள ஜங்ஷன் குழிக்கு காங்கிரீட் மூடி அமைத்துத் தரக் கோருதல்
4. ஹாஸ்டல் ரோட்டில் கணேஷ் காம்பவுண்டிலிந்து வடக்கே டாக்டர்.சத்தியமூர்த்தி வீடு வரை மழைநீர் வடிகால் அமைத்து தரக்கோருதல்.
5. மாகாளியம்மன் கோவில் அருகில், ஒரு இலட்சம் லிட்டர் மேல்நிலைத் தொட்டிக்கு கீழ் உள்ள, சித்தம்பலம் சாலை பெருமாள் கோவில் வீதி செல்லும் பிரிவு, பொள்ளாச்சி சாலை ராமசாமி வீட்டுக்கு முன்புறம், காளியப்பா நகர் ஆர்ச் முன்பு உள்ள 3'' பிவிசி கேட்வால்வுகளை மாற்றி பித்தளை கேட்வால்வுகளாக மாற்றி தரக்கோருதல்.
6. ஹாஸ்டல் காலனி இரண்டாவது வீதியில் உள்ள 2'' குடிநீர் குழாய்களை மாற்றி புதியதாக 3'' குழாய் அமைத்து தரக்கோருதல்.
7. ஹாஸ்டல் காலனி இரண்டாவது வீதி விநாயகர் கோவில் அருகில் உள்ள கல்வெட்டு மீது குடிநீர் குழாய் செல்வதால் தண்ணீர் சரியாக வருவதில்லை அதனை சரி செய்து நேராக செல்ல குழாயினை மாற்றி அமைத்து தரக்கோருதல்.
8. காளியப்பா நகர் மேற்கு பகுதிக்கு பஜனை கோவில் அருகில் உள்ள மேல்நிலைத் தொட்டியில் இருந்து தண்ணீர் வருவதால் அப்பகுதிக்கு தண்ணீர் சரியாக செல்வதில்லை எனவே அதனை மாற்றி குமரன் நகர் பகுதியில் இருந்து குழாய் அமைத்து தரக்கோருதல்.

## பொருள் :50

**பல்லடம் நகராட்சியில் 11.08.2023 ஆம் தேதியில் நடைபெற்ற நகராட்சி கடைகளுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் அதிகபட்ச ஏலத்தொகை கோரிய கீழ்கண்ட இனங்கள் பொது ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளது, அதன் விவரம் கீழ்கண்டவாறு :–**

| வ. எண் | கடைகள் மற்றும் குத்தகை இனங்கள் விவரம் | உரிமைதார் பெயர் | அதிகபட்ச ஏலத்தொகை கோரிய விவரம் | உரிம காலம் |
|---|---|---|---|---|
| 1 | தினசரி மார்க்கெட் வடக்கு பார்த்த கடை எண் : 2/11 | பிருந்தாவன் பாரிக் | ரூ. 11,500./– | 01.09.2023 முதல் 31.08.2026 வரை |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | தினசரி மார்க்கெட் வடக்கு பார்த்த கடை எண் : 10/11 | T.ராஜசண்முகம் | ரூ. 11,200./- | 01.09.2023 முதல் 31.08.2026 வரை |
| 3 | தினசரி மார்க்கெட் வடக்கு பார்த்த கடை எண் : 13/11 | K.அனிதா | ரூ. 10,800./- | 01.09.2023 முதல் 31.08.2026 வரை |
| 4 | பேருந்து நிலைய தெற்கு பார்த்த கடை எண் : 7/11 | K.நவீன் குமார் | ரூ. 11,000./- | 01.09.2023 முதல் 31.08.2026 வரை |
| 5 | பேருந்து நிலைய தெற்கு பார்த்த கடை எண் : 10/11 | நவாஷ் ஷெரிப் | ரூ. 11,200./- | 01.09.2023 முதல் 31.08.2026 வரை |
| 6 | பேருந்து நிலைய கிழக்கு பார்த்த கடை எண் : 1/7 | A.மணிகண்டன் | ரூ. 11,100./- | 01.09.2023 முதல் 31.08.2026 வரை |
| 7 | பேருந்து நிலைய கிழக்கு பார்த்த கடை எண் : 2/7 | E.ரேவதி | ரூ. 11,000./- | 01.09.2023 முதல் 31.08.2026 வரை |
| 8 | பேருந்து நிலைய கிழக்கு பார்த்த கடை எண் : 5/7 | A.ரமேஷ் | ரூ. 11,000./- | 01.09.2023 முதல் 31.08.2026 வரை |
| 9 | பேருந்து நிலைய கிழக்கு பார்த்த கடை எண் : 6/7 | P.சரஸ்வதி | ரூ. 11,000./- | 01.09.2023 முதல் 31.08.2026 வரை |
| 10 | பேருந்து நிலைய கிழக்கு பார்த்த கடை எண் : 7/7 | L.வினோதினி | ரூ. 11,000./- | 01.09.2023 முதல் 31.08.2026 வரை |
| 11 | பேருந்து நிலைய வடக்கு பார்த்த கடை எண் : 1/4 | S.சிங்காரவேல் | ரூ. 11,400./- | 01.09.2023 முதல் 31.08.2026 வரை |
| 12 | பேருந்து நிலைய வடக்கு பார்த்த கடை எண் : 3/4 | A.சுபாஷ் அர்ஜுன் | ரூ. 11,000./- | 01.09.2023 முதல் 31.08.2026 வரை |
| 13 | பேருந்து நிலைய வடக்கு பார்த்த கடை எண் : 4/4 | S.லோகநாதன் | ரூ. 11,000./- | 01.09.2023 முதல் 31.08.2026 வரை |
| 14 | பேருந்து நிலைய மேற்கு பார்த்த கடை எண் : 1/6 | செல்லச்சாமி | ரூ. 11,000./- | 01.09.2023 முதல் 31.08.2026 வரை |
| 15 | பேருந்து நிலைய மேற்கு பார்த்த கடை எண் : 3/6 | V.கிரீஸ்பாபு | ரூ. 11,000./- | 01.09.2023 முதல் 31.08.2026 வரை |
| 16 | பேருந்து நிலைய | E.பவித்ரா | ரூ. 11,000./- | 01.09.2023 முதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கு பார்த்த கடை எண் : 5/6 | | | 31.08.2026 வரை |
| 17 | பேருந்து நிலைய மேற்கு பார்த்த கடை எண் : 6/6 | E.கவிதா | ரூ. 11,000./- | 01.09.2023 முதல் 31.08.2026 வரை |

மேற்காணும் இனங்கள் வரிசை எண் 1 முதல் 17 வரையிலான கடைகளுக்கு ஏலம் கோரப்பட்டதில் அதிகபட்ச ஏலத்தொகையாக கோரியதை ஏற்கவும், கடைகளை ஒதுக்கீடு செய்யவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அதன் உரிமைக்காலம் 01.09.2023 முதல் 31.08.2026 வரை ஆகும். மேற்கண்ட உரிமைதாரர் அவரது விருப்பத்தின் பேரில் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை 15% வாடகை உயர்வு செய்து உரிமத்தை புதுப்பித்துக் கொள்ளவும்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க எண்:1422/2014/அ2)

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>பொருள் :51</u>

தமிழக அரசால் கொரோனா பெருந்தொற்று காலத்தில் நகராட்சி கடைகளுக்கு 5 மாதங்கள் ( ஜுன்–2020, ஜுலை–2020, ஆகஸ்ட் –2020, மே–2021 மற்றும் ஜுன்–2021 ) வாடகை தள்ளுபடி செய்து வரப்பெற்ற அரசாணை எண்: G.O (D) No: 337, நாள் : 16.06.2023–ன் படிபிறப்பிக்கப்பட்ட உத்திரவை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க எண்:1422/2014/அ2)

## <u>பொருள் :52</u>

அரசாணை (நிலை) எண் :10, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை, நாள் :23.01.2023 ல், நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப பணியிடங்களுக்கான வரையறை நிர்ணயம் செய்து அதற்கேற்ப புதிய பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் ஏற்கனவே உள்ள பணியிடங்களை முறைப்படுத்தி ஆணையிடப்பட்டுள்ளது. இதன்படி, பல்லடம் நகராட்சியில் புதியதாக பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு நிரப்பப்பட்டு வருகின்றன. இதனால் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள பணியிடங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இடப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே, பல்லடம் நகராட்சி அலுவலக வளாகத்தில் கூடுதலாக கட்டிடம் கட்டும் பணியினை ரூ.40.00 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 53</u>

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2023–2024ன் கீழ் பொதுசுகாதார பணிக்காக 09.08.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | டெங்கு மற்றும் பிற வகை காய்ச்சல் பரவாமல் பொதுமக்களை தொற்றுநோயிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு டி.பி.சி. பணியாளர்களை பணியமர்த்துதல் | 48.00 | M/s. Saram Enviro Services Private Ltd, சென்னை. | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.11% அதிகம் (ரூ.640/நபர் ஒருவருக்கு) |
| | | | M/s. The RK Company, சென்னை. | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.28% குறைவு (ரூ.613/நபர் ஒருவருக்கு) |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s.The RK Company (மதிப்பீட்டினை விட 0.28% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 54</u>

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2023–2024ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 24.08.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் : 01 முதல் 18 வரை உள்ள 12 குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளிலிருந்து குடிநீர் விநியோகம் மற்றும் Liquid Chlorination ஆகிய பணிக்கு ஆட்கள் சப்ளை செய்தல் (Outsourcing) | 9.50 | M/s.அன்னை எண்டர்பிரைசஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.17% குறைவு |
| | | | M/s.கே.கே கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.08% குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s.அன்னை எண்டர்பிரைசஸ் (மதிப்பீட்டினை விட 0.17% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கும், மேலும் மேற்கண்ட பணியானது குடிநீர் பணியாக உள்ளதாலும், பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>பொருள் : 55</u>

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2023–2024ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 24.08.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்: 01 முதல் 18 வரை உள்ள நகராட்சிக்கு சொந்தமான 103 ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் 13 திறந்தவெளிக் கிணறுகள் மூலம் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஆட்கள் சப்ளை செய்தல் (Outsourcing) | 9.80 | M/s.அன்னை எண்டர்பிரைசஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.17% குறைவு |
| | | | M/s.கே.கே கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.04% குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s.அன்னை எண்டர்பிரைசஸ் (மதிப்பீட்டினை விட 0.17% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கும், மேலும் மேற்கண்ட பணியானது குடிநீர் பணியாக உள்ளதாலும், பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 56

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2023–2024ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 24.08.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தேசிய நெடுஞ்சாலையின் மையத்தில் இரு முகப்பு கொண்ட 163 எண்ணிக்கையிலான 120 Watts LED மின்விளக்குகளை ஆறு மாதத்திற்கு பராமரிப்பு செய்தல் பணி | 4.20 | M/s.அன்னை எண்டர்பிரைசஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.57% குறைவு |
| | | | M/s.கே.கே கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.29% குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s.அன்னை எண்டர்பிரைசஸ் (மதிப்பீட்டினை விட 0.57% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :57

பல்லடம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த ஜனவரி 2022 ஆம் ஆண்டு வார்டு வாரியாக தெருநாய்கள் கணக்கீடு செய்யப்பட்டு உரிமையாளர்கள் அற்ற 456 தெருநாய்கள் கண்டறியப்பட்டு அரசு வழிகாட்டுதலின்படி Animal Welfare Board of India வில் பதிவு பெற்ற

நிறுவனமான திருநெல்வேலி ராஜேஸ்வரி கௌசாலா நிறுவனம் மூலம் முதல் பகுதியாக இந்நகராட்சி பகுதியில் கண்டறியப்பட்ட தெருநாய்களில் 321 நாய்களுக்கு ( தெரு நாய் 1 க்கு கருத்தடை செய்ய கட்டணம் ரூ 700/– ரூபாய் ) கருத்தடை செய்யப்பட்டுள்ளது. பல்லடம் நகராட்சி பகுதிகளில் தெருநாய்கள் கருத்தடை செய்தல் பணிகளை கண்காணிப்பு Monitering Commity அமைக்கப்பட்டு இதன் இனப்பெருக்கம் முறையாக கண்காணிக்கப்பட்டு வரப்படுகிறது.

கருத்தடை செய்யாமல் விடுபட்ட 135 தெருநாய்களும் ஜீன் 2023 ஆம் மாத கணக்கெடுப்பின்படி கூடுதலாக கண்டறியப்பட்ட 87 தெருநாய்களையும் சேர்த்து ஆக மொத்தம் 222 தெருநாய்களுக்கு, கருத்தடை செய்யப்பட வேண்டியுள்ளது. இப்பணிகளுக்காக அரசாணை நிலை எண்: 4 D No:1 நாள் 17.03.2023 ன்படி நாய் 1க்கு கருத்தடை செய்ய கட்டணம் ரூ 200+1450=1650/– ரூபாய் செலவினம் ஆகும் , நமது பல்லடம் நகராட்சியில் கண்டறியப்பட்ட 222 தெருநாய்களுக்கு கருத்தடை செய்ய ரூ3,66,300/– இதர கூடுதல் செலவினங்களை சேர்த்து ரூபாய் 4.00 இலட்சம் செலவினம் ஏற்படும் என்பதையும் இப்பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினங்களை பொதுநிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

## பொருள் :58

பல்லடம் நகராட்சி வார்டு எண்:11 பெரியார் நகர் பகுதியில் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கான தண்ணீர் இல்லாத காரணத்தினால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, அந்தப் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்த வேண்டியுள்ளது. மேற்கண்ட பணியினை ரூ.5.00 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :59

பல்லடம் நகராட்சி வார்டு எண்:09 பட்டேல் வீதியில் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கான தண்ணீர் இல்லாத காரணத்தினால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, அந்தப் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்த வேண்டியுள்ளது. மேற்கண்ட பணியினை ரூ.5.00 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :60

பல்லடம் நகராட்சி ஆணையாளர் குடியிருப்பு கட்டிடத்தில் ஏற்பட்டுள்ள சிறு, சிறு பழுதுகளை சரி செய்ய வேண்டியுள்ளது. மேற்கண்ட பணியினை ரூ.0.50 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :61

பல்லடம் நகராட்சி பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள இலவச ஆண்கள் மற்றும் பெண்கள் சிறுநீர் கழிப்பறை மிகவும் பழுதடைந்து துர்நாற்றம் வீசுவதால் பொதுசுகாதார கேடு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே மேற்காணும் சிறுநீர் கழிப்பறையில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய வேண்டியுள்ளது. மேற்கண்ட பணியினை ரூ.2.00 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :62

பல்லடம் நகராட்சி வார்டு எண்:14 கொசவம்பாளையம் சாலை, மேற்கு பல்லடம் பகுதியில் கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த மிகவும் சிரமமாக உள்ளது. இதில் கழிவுநீர் தொட்டியில் பழுது பார்க்க வேண்டியது மிகவும் அத்தியாவசியமாக உள்ளது. மேற்கண்ட பணியினை ரூ.9.00 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :63

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:1725/2022/எம்1 நாள்:21.08.2023 ல் நகராட்சிகளுக்கு புதியதாக ஈப்பு வாகனங்களை வாங்குவதற்கான அனுமதி பெறுவதற்கு 31.12.2023 க்குள் பிரேரணை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. பல்லடம் நகராட்சியானது 09.08.2010 ஆம் ஆண்டு முதல் மூன்றாம் நிலை நகராட்சியிலிருந்து தரம் உயர்த்தப்பட்டு முதல் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி 18 வார்டுகளையும் 19.42 சதுர கி.மீ. பரப்பளவும் கொண்டுள்ளது. இந்நகராட்சியில் தற்சமயம் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், 15வது மத்திய நிதிக்குழு திட்டம், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், நமக்கு நாமே திட்டம், தூய்மை பாரத இயக்கம்–திடக்கழிவு மேலாண்மை திட்டம், பொதுப்பணிகள், குடிநீர் பணிகள் மற்றும் தமிழக அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் திட்டங்கள் என அனைத்து விதமான வளர்ச்சித் திட்டப் பணிகளும் பொறியியல் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பல்லடம் நகராட்சிக்கு வழங்கப்படும் குடிநீரானது பில்லூர்– அத்திக்கடவு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நகரின் 12 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலும் ஏற்றப்பட்டு 93.10 கி.மீ. நீளமுடைய பகிர்மான குழாய்கள் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரை அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர்

அலுவலகம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் ஆகிய அலுவலகங்களில் நடைபெறும் ஆய்வுக் கூட்டங்களில் பங்கேற்கும் பொருட்டு இதுநாள் வரை TN 42 F 5736 மற்றும் TN 42 P 4444 ஆகிய இரண்டு ஈப்பு வாகனங்களில் அடிக்கடி பழுது ஏற்படுவதால் மேற்கண்ட பணிகளை ஆய்வு செய்யவும், ஆய்வுக் கூட்டங்களுக்கு சரியான நேரத்தில் செல்ல முடியாத நிலை ஏற்படுகிறது. மேற்கண்ட வண்டி எண் TN 42 F 5736 வாகனம் வாங்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதாலும், 2.500 இலட்சம் கிலோ மீட்டருக்கு மேல் சென்றுவிட்டதாலும், TN 42 P 4444 வாகனம் வாங்கப்பட்டு 7 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதாலும், 1.800 இலட்சம் கிலோ மீட்டருக்கு மேல் சென்றுவிட்டதாலும் சீராக இயக்க முடியாமல் உள்ளது. எனவே, நகராட்சிக்கு புதியதாக Bolero ஈப்பு வாகனம் (GeM rates) ரூ.12.00 இலட்சம் செலவினத்தில் வாங்கிக் கொள்ளவும் மேலும் புதியதாக வாகனம் வாங்குவதற்கு அனுமதி பெரும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி மேல்நடவடிக்கை மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :64

திரு.B.ஆனந்த், அரசு வழக்கறிஞர், சென்னை அவர்களின் கடிதம் நாள்.27.01.2023, 20.04.2023 மற்றும் 07.08.2023 ல் சென்னை மாண்பமை உயர்நீதிமன்ற வழக்கு எண் W.P No: 2190/2023,12219/2023 மற்றும் 22728/2023 க்கான கட்டணத்தொகை ரூ.60,000/- ஐ வழங்குமாறு கேட்டுள்ளார். எனவே, மேற்கண்ட வழக்கு கட்டண தொகை ரூ.60,000/- ஐ திரு.B.ஆனந்த், அரசு வழக்கறிஞர், சென்னை அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்:1185/2020/எப்11).

**அலுவலக குறிப்பு :**
மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :65

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 சட்டம் 57 (7) ன் கீழ் அவசர அவசியம் கருதி கீழ்க்கண்ட செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

I. கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட முகாம் நடைபெற உள்ள நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு கல்லூரிகளில் 21 இடங்களில் 05.08.2023 முதல் 14.08.2023 வரை மற்றும் 19.08.2023 முதல் 21.08.2023 வரை சாமியானா அமைத்தல், சேர், டேபிள் மற்றும் குடிநீர் வசதி செய்தல் பணிக்கு ரூ.2,97,855/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.

II. முதலமைச்சரின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை பல்லடம் நகராட்சிப் பகுதியில் நடைமுறைபடுத்தப்பட உள்ளதால் 9 நகராட்சி பள்ளிகளில் பதாகைகள் (Banner) அச்சடித்து வைத்தல் பணிக்கு ரூ.57,000/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.

III. பல்லடம் நகராட்சியில் முதலமைச்சரின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 1302 எண்ணிக்கை சில்வர் தட்டு மற்றும் டம்ளர் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.2,27,850/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட செலவினங்கள் மேற்கொண்டதற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>பொருள் :66</u>**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பாரதிபுரம், ஜே.கே.ஜே காலனி, மங்கலம் சாலை ஆகிய பகுதிகளில் சேகரமாகும் மழைநீர் செந்தோட்டம் செல்லும் வழியில் உள்ள மழைநீர் வடிகால் வழியே ஓடைக்கு செல்கிறது. இதேபோல், மகாலட்சுமிபுரம் பகுதியில் உள்ள மழைநீர் வடிகாலும் செந்தோட்டம் சாலையில் உள்ள மழைநீர் வடிகாலுடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட செந்தோட்டம் சாலை மழைநீர் வடிகாலில் (ஆர்.சி.சி. பைப்) அதிக அளவு தண்ணீர் செல்வதால் மகாலட்சுமிபுரம் பகுதியில் உள்ள தண்ணீர் வெளியேற முடியாமல் அதே இடத்தில் சாலையில் தேங்கி குடியிருப்பிற்குள் செல்கின்றது. இதனால் பொதுசுகாதார கேடு ஏற்படும் அபாயம் உள்ளது. தற்போது மழைகாலம் என்பதால், மேற்கண்ட பகுதியில் உள்ள தண்ணீரை வெளியேற்ற, மகாலட்சுமி நகர் பகுதியிலிருந்து செந்தோட்டம் கிழக்கு பகுதி வரை புதியதாக மழைநீர் வடிகால் கட்ட வேண்டியுள்ளது. மேற்கண்ட பணியினை ரூ.24.00 இலட்சம் செலவில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

நகர்மன்றத் தலைவர்
பல்லடம் நகராட்சி

## பொருள் :67

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட திருப்பூர் சாலை இராயர்பாளையம் பகுதியில் பேருந்து நிறுத்த நிழற்கூடை இல்லாததால் பொதுமக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட இராயர்பாளையம் பகுதியில் பேருந்து நிறுத்த நிழற்கூடை அமைக்கும் பணிக்கு ரூ.4.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

நகர்மன்றத் தலைவர்
பல்லடம் நகராட்சி